2011 ஜனவரி 11]

14—

கால்நடை மருந்தகம்

***117032—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு வட்டம், படந்தாலுமூடு கால்நடை முதலுதவி சிகிச்சை மையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு வட்டம், படந்தாலுமூடுவில் உள்ள கால்நடை முதலுதவி சிகிச்சை மையத்தைத் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சில கிளை மருந்தகங்களில் மாதந்தோறும் 25 கருவூட்டல்கூட நடைபெறவில்லை. ஆனால், முதலுதவி சிகிச்சை மையத்தில் மாதந்தோறும் 75 முதல் 100 கருவூட்டல் வரையிலும் நடக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாதந்தோறும் 1,600-க்கும் அதிகமான தடுப்பூசிகள் ஆந்திராக்ஸ், வைரஸ் நோய்க்காகப் போடப்படுகிறது. இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து என்னுடைய கோரிக்கை எவ்வளவு நியாயமானது என்பதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அரசினுடைய முடிவை மறுபரிசீலனை செய்வதுடன், திருவட்டாறு, திங்கள்சந்தை, வடசேரி ஆகிய மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்பவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஜனவரி 11

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மண்டலம், விளவங்கோடு வட்டம், மேலபுரமி ஊராட்சி ஒன்றியத்தில் 2 கால்நடை மருந்தகங்களும், 4 கால்நடை கிளை நிலையங்களும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. படந்தாலுமூடு கிராமம் மற்றும் அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை அலகுகள் குறைவாக இருப்பதாலும், அக்கிராமத்திற்கு அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் போதுமானதாகக் கருதப்படுவதாலும், படந்தாலுமூடு கிராமத்தில் கால்நடை முதலுதவி சிகிச்சை மையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த தற்போது வாய்ப்பு இல்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பதிவு செய்து, முன்னுரிமை அடிப்படையில் எதிர்காலத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வரும். விரைவிலே காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜான் ஜோசப்.

முற்பகல் 10-10

திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலுள்ள ஒரு நடமாடும் கால்நடை மருந்தகத்தினுடைய கதை சோகக் கதையாக உள்ளது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னால் அன்றைக்கு இந்தத் துறைக்குப் பொறுப்பு வகித்த மாண்புமிகு அமைச்சர் திருமதி கீதா ஜீவன் அவர்கள் ஒரு அரசு விழாவில் கலந்துகொண்டார்கள்.

அப்போது எங்களுடைய பகுதிக்கு ஒரு நடமாடும் கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாகனம் வாங்கித் தந்தால், அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள். நாங்கள் வாகனம் வாங்கிக் கொடுத்து, மூன்று ஆண்டுகள் ஆகியும் அதற்குரிய ஓட்டுநர், மருத்துவர், கால்நடை பராமரிப்பு உதவிப் பணியாளர் போன்ற இடங்களை நிரப்புவதற்கு அரசாணை வெளியிடப்படவில்லை. இதே சட்டசபையில் நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

2011 ஜனவரி 11]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசாணை விரைவில் வெளியிடப்படும் என்ற பதிலையே தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். ஆகவே, இந்த அரசாணை எப்போது வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறுதியாகவும், இறுதியாகவும், உறுதியாகவும் இந்தச் சபையில் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அரசாணைகள் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், குறிப்பாக, மொடக்குறிச்சி தொகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் நடமாடும் கால்நடை மருந்தகமும் அதேபோல் நடமாடும் கால்நடை செயற்கைக் கருவூட்டல் முறை சாதனங்களும் அமைத்துத் தருவது அரசின் பரிசிலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நூறு கால்நடை கிளை நிலையங்களை அமைப்பதாக அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். உங்களுடைய பகுதியிலும் புதிதாக கால்நடை கிளை நிலையங்கள் வர இருக்கின்றன. ஆகவே, தங்களுடைய கோரிக்கையை அக்கால்நடை கிளை நிலையங்கள் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதியில், எனது சொந்த கிராமமான

புலியூர்காட்டுவலசை கிராமத்தில் பல ஆண்டுக் காலமாக இருந்து வந்த கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகத்தை அங்கிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் சென்று விட்டார்கள். சுற்றுவட்டாரத்தில் சுமார் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. இருந்த கால்நடை மருத்துவமனையையும் எடுத்துச் சென்று விட்டார்கள். பகுதி நேரமாக மருத்துவர்கள் வந்தார்கள். அவர்களும் இப்பொழுது வருவதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவந்தபோது, திரும்பவும் அங்கு மருத்துவமனையும், மருந்தகமும் செயல்படும் என்று கடந்த கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் அதற்கான எந்தவித நடவடிக்கையையும் அதிகாரி பெருமக்கள் எடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பவும் எனது சொந்த கிராமத்தில் அந்த மருத்துவமனை மற்றும் மருந்தகம் இயங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிதாக 200 கால்நடை கிளை நிலையங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதற்கு அனுமதி கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

திருமண மண்டபம்

***106598—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—